திரு. என். கிட்டப்பா: நலிவுற்றோர்க்கு உதவி செய்ய வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம், அதனால் ஆண்டு ஒன்றுக்கு எண்பது லட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்படுகிறது என்பது பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பொதுவாக பொதுப் படிப்பகங்களுக்கு மின் கட்டணச் சலுகை வழங்க அரசு ஆவன செய்ய முன்வருமா? அதோடு அந்தப் பொதுப் படிப்பகங்கள் இன்டஸ்ட்ரியல் ஏரியாவில் உள்ள பகுதிகளில் அமைந்துவிடுமானால் அந்த இன்டஸ்ட்ரியல் ஏரியாவில் அதே விகிதாச்சாரத்தில் உள்ள மின் கட்டணத்தைப் பொதுப் படிப்பகங்கள் கட்ட வேண்டும் என்ற நிலை இருப்பதால் அதையாவது ஒழுங்குபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: பொது நூலகங்கள், பொதுப் படிப்பகங்கள் பற்றித் தனியாகக் கட்டணங்கள் இது வரை வரையறுக்கப்படவில்லை. அதுபற்றி அரசு ஆராயும்.

தஞ்சை மாவட்டத்தில் ''மோகினி அலவன்ஸ்'' திட்டம்

*வினா எண் 5—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ''மோகினி அலவன்ஸ்' என்ற திட்டம் ஏதேனும் செயல் முறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்த அலவன்ஸ் எதற்காக, யார் யாருக்கு எந்த அடிப்படையில் தரப்படுகின்றது?

(இ) 1974 முதல் ஒவ்வொரு ஆண்டும் மேற்படி அலவன்ஸ் பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்

(ஆ) மற்றும் (இ): * விவர அறிக்கையொன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப்: இந்த மோகினி தஞ்சை மாவட்டத்தில் மட்டுமா அல்லது தமிழ்நாட்டில் உள்ள எல்லாயிடங்களிலும் உலாவி வந்திருக்கிறாளா? தஞ்சை மாவட்டத்தில் இருந்து மட்டும் அந்த மோகினியை விரட்ட ஏற்பாடு செய்திருக்கும் இந்த அரசாங்கம் மற்ற இடங்களில் ஏன் அப்படிச் செய்யவில்லை? இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளை இனிமேலாவது ஒழிக்க இந்த அரசு முன்வருமா?

[* 273-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இது தமிழக அரசு செய்வதல்ல, இந்த நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட போது, அதற்கு முன்னால் இருந்த அரசாங்கங்கள் கோவில்களுக்கும் மடங்களுக்கும் மானியம் கொடுத்து வந்தார்கள். ஆங்கிலேய ஆட்சி வந்த பிறகு நேரடியாக இதிலே தலையிடக் கூடாது என்பதற்காக இதை அங்கிருக்கிற கிராம அதிகாரிகள் கொடுத்து வந்தார்கள். அதற்குப் பிறகு அரசாங்கம் கொடுத்து வருகிறது. மோகினி இனாம் என்பது தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் இருக்கிறது. வேறு ஊரில் இல்லை. வேறு ஊரில் இருந்தால் இதைக் கவனிக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. இது இன்று ஏற்பட்டதல்ல. 1863-ம் ஆண்டு ஏற்பட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இந்த மோகினி அலவன்ஸ் என்பது எங்களுக்கெல்லாம் புதிதாக இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பரீட்சையில் கேள்வி கேட்பது போல் இருக்கிறது. மோகினி என்பதைத் தவறாக எண்ணிக் கொள்ளக் கூடாது. மோகினி இனாம் என்பது உருது வார்த்தை. உருது படித்தவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. என். கிட்டப்பா: அதைத்தான் என்னவென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மோகினி என்றால் தமிழ் வார்த்தையில் உள்ள பெண்ணின் பெயர் அல்ல. அது உருது வார்த்தை என்று சொன்னார்கள். அதுதான் விளக்கம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நில ஒப்படை

வினா எண் 6—திரு. துரை கோவிந்தராசன் மற்றும் திரு. கே. சௌந்தரராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதியில் புதுக்கோட்டையில் நடந்த கால்நடைக் கண்காட்சி மற்றும் பட்டா வழங்கு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் எத்தனை நபர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கப் பெற்றது?

(ஆ) அதில் ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களில் மொத்தப் பரப்பளவும் அவைகளின் அங்காடி மதிப்பும் யாவை?